
உ

சிவமயம்

# இராசம்மா மணிமாலை



அமரத்துவமாகு
இராசம்மா தம்பிராசா
அவர்களது ஞாபகார்த்த
அஞ்சலிப் பாமாலை
17-12-2011

உ

சிவமயம்

# இராசம்மா மணிமாலை!

## வெளியீடு:

வேலணை 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
கனடா மார்க்கம் நகரை வதிவிடமாகவும்
கொண்டு அமரத்துவமடைந்த
அமரத்துவமாது
இராசம்மா தம்பிராசா அவர்களது
ஞாபகார்த்த வெளியீடு

17-12-2011

## எமது அன்புத் தாயின்
## பாத கமலங்களுக்கு இந்நாள்
# சமர்ப்பணம்



நாயகருக்கு ஏற்ற நல்மனைவியாக,
நற்பண்பு மிக்க மனையாளாக,
பிள்ளைச் செல்வங்களுக்குக்
கல்வியும், போதனையும் ஊட்டுவித்து
நானிலமும் வியக்கும் வண்ணம்
மிளிரச்செய்த தாயாராக, மருமக்களின்
அருமை மாமியாராக, பேரப்பிள்ளைகள்
ஆரத்தழுவும் அன்புப் பாட்டியாக
சீவியத்தில் எம்மை நேசித்த எமது
அன்புத்தெய்வத்தின் பாதார
விந்தங்களில் அவர்தம் நினைவு கூரும்
இராசம்மா மணிமாலை என்னும்
இந்த அரும் நூலைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்!

-மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சுற்றம் அனைவரும்.



# திதி வெண்பா!



அமரத்துவமாது


## திருமதி. இராசம்மா தம்பிராசா

உருவில்: 04-02-1921 அருவில்: 17-11-2011

## திதி வெண்பா!

ஆண்டிரண் டாயிரம் ஆகும் பதினொன்றில்
பூண்கார்த்தி கையாம் பதினேழில்-வேண்டும்
அபரபக்கச் சப்தமியில் (இ)ராசம்மா அம்பாள்
சுபவனத்திற் சென்றார் துதி!

என் அம்மம்மாவிற்கு சமர்ப்பணம்



அன்புச் செல்லப்பேரன் அஜனன் நவரத்தினராசா
அவர்களால் வரையப்பட்டது.

# விநாயகர் வணக்கம்



சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதனம் த் யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே!

மூஷிகவாஹன மோதகஹஸ்த
சாமரகர்ண விலம்பித ஸூத்த
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே!

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா! -ஔவையார்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை - கபிலதேவர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே - திருமந்திரம்

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழிமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்
புரியிட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையாயின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

# பஞ்சபுராணப் பாடல்கள்

## தேவாரம்

சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
        தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினு முன்னை மறந்தறியேன்
        உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுளல்வார்
        உடலுள்ளு றுசூலை தவிர்த்த ருள்வார்
அலைந்தே னடியேன திகைக் கெடில
        வீரட்டானத் துறை அம்மானே!

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
        அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
        புழுத்தலைப் புலைய னேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
        செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
        எங்கெழுந் தருளுவ தினியே!

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
        நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
        வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
        அம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
        தொண்டனே னிசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

## பெரிய புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி
அளவிலா வுளவு மாகிச்
சோதியாய் உணர்வும் ஆகித்
தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப்
பெண்ணுமாய் ஆணு மாகிப்
பாதியா நிற்குந் தில்லைப்
பொதுநடம் போற்றி! போற்றி!

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே!
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே!

ஓம்சரவணபவ தேவராய சுவாமிகள் இயற்றிய

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்போம் - நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள்
கந்தர் சஷ்டி கவசந் தனை

## குறள் வெண்பா

"அமரரிடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி"

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனால் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹுன நிறநிற நிறென
வசர ஹுணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக

ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றென்முன் நித்தம் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யெவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு தின்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவாயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொழிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனிலி சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக
மொகென நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருப்பல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைதொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா ணாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனக வேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ட்சதரும்

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனையடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் மஞ்சனமும் ஒருவளிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
காலதூ தானெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்குச் செதில் செதிலாக
குத்துக் குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே முலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைளொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமான ஆடினே
னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க வாழ்க
வாழ்க வடிவேல் வாழ்க வாழ்க
வாழ்க மலைக்குரு வாழ்க வாழ்க
வாழ்க வாரணத் துவசம் வாழ்க
வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தன் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியா தழைத்திட அருள் செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத் தேழ்வர்க் குவந்த முதளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம் !
(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)

# பட்டிணத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

வட்டியிலுந் தொட்டிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து  முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

நொந்து சுமந்து பெற்று நோவமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய்
தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்.

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப பார்த்து மகிழாமல் -உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மகனே எனவழைத்த வாய்க்கு

அள்ளியிடுவ தரிசியோ தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமன் - மெள்ள
முகமேன் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்க மூள்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ! காகம்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வேந்தாளோ சோணகிரி வித்தகா நின் பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்தமும்
உன்னை நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தல மேல் வைத்தழு மைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணியப் பாவமுமே.

# வேலணை ஐந்தாம் வட்டாரம் அமரத்துவமாது தம்பிராசா இராசம்மா அவர்களது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்!

## தோன்றல் தேசமும் ஊரும்

(எண்சீர் விருத்தம்)

மாங்கனிபோல் வடிவமொடு மலைசார் நாடு
மண்செழிப்பும் பசுமையுமாய் மருவும் நாடு
தாங்கிவரும் தேயிலையும் கமுகு தென்னை
தானழகு கொண்டதொரு உலகின் நாடு
பாங்கதனில் தமிழர்களின் பண்புப் பூமி
பாரதனில் பண்பாடு பகலும் மாந்தர்
தாங்கிவரத் தேசவளம் தந்த நாடு
தரணியிலே இலங்கையாம் நாடு கண்டீர்!

இலங்கையார்த் தீவதனில் வடக்கும் கிழக்கும்
இல்லகமாய் கொண்டதொரு தமிழர் மாண்புத்
துலங்குமொரு தமிழழகுத் தூய தேசம்
தெம்மாங்குத் தமிழ்சுரக்கத் திளைக்கும் தேசம்
பலம்திருவாய் ஆனவர்கள் பண்பார் தமிழர்
பரந்தநலம் கொண்டவர்கள் பரவும் பூமி
குலம்தமிழர் நாடுஎன்ற குறித்த முந்தைக்
குவலயமே அறிந்ததொரு அழகு நாடு!

தமிழ்நிலத்தின் வடபாலே தமிழன் தொன்மைத்
தாயென்ற அழகுநிலத் தான்றோர் கூடி
அமிழ்தென்ற புலவர்கள் அறிவுத் துறைசேர்
ஆசிரியர் கல்வியிலே அழகு சேர்க்கும்
கமழ்கின்ற பெரும்நல்லைக் கந்தன் அருளும்
கனிமன்னன் சங்கிலியன் காலம் முன்னாய்
தமிழரசம் செழித்துநின்ற தரணி யாட்சி
தங்கநிலம் யாழ்ப்பாணம் என்றே சொல்வார்!

சங்கிலியன் ஆட்சியொடு சரித்தி ரங்கள்
சந்தித்த ஊர்காவற் துறைசேர் ஆட்சி
பொங்கிவரும் தீவகத்தின் புகலாய் நின்று
பூம்புகலாய் ஆனதொரு வழியே வந்த
தங்கநிலம் தீவகமாய் தந்த காட்சித்
தரணியிலே பொன்கொழிக்க நின்ற சேதி
அங்கமதாய் கொண்டநிகர் அணியின் சிற்பம்
ஆனதுவே தீவகமாம் அழகார் வீதி!

தீவகத்தின் வேலணையூர் வடக்குத் தன்னில்
திருவான இலந்தைவனப் பதியின் பாங்கில்
பூவகங்கள் பயிர்கள்நிலப் பசுமை ஊறிப்
புகையிலையும் விவசாயப் பொருளும் மேவும்
காவகமாய் வியாபாரம் கணிதம் கல்வி
கனிந்தநிலம் தமிழ்வந்து கவிதை சொல்லும்
பாவகமாய்த் தீவகத்தில் பதியம் பெற்ற
பண்பாரும் ஊரதுவாய்ப் பகல்வார் அம்மா!

# பிறப்பும் வாழ்வும்
(அறுசீர் விருத்தம்)

வேலணை ஊரின் செல்வம்
மிகுசைவத் துறையும் கல்விச்
சீலமும் செழிப்பும் ஏரார்
சிந்திய வியர்வைக் காற்றில்
ஞாலமும் வியக்க வைத்த
நற்தமிழ்ப் பூமி என்ற
கோலமார் வண்ணம் இந்தக்
குவலயம் எல்லாம் கண்டார்!

ஏகமும் சிறப்புக் கொண்ட
எழிலுறும் வேல ணைக்கண்
நாகம்மா என்னும் நங்கை
நல்லெழில் மாது தன்னை
பாகமாய் வதுவை செய்ய
பசுந்தீ விருந்து வந்தார்
யாகமாய் முதலி வம்ச
புற்றிடங் கொண்டார் நாமன்!

தனிநாய கவம்சம் கொண்ட
புற்றிடங் கொண்டார் மேவும்
இனியவள் நாகம் மாதன்
இல்லறக் கிழத்தி கண்டு
மனையறம் சிறக்க ஐவர்
மகவுக ளாகக் காண
சுனையெனும் செல்வ வாழ்வு
சுகித்ததைக் கண்டார் தாமே!

முருகேசு, தங்கம் மாவும்
வீரனாம் ஆறு முகம்,
அருகுசுப் பிரம ணியம்,
இராசம்மா என்னும் ஐவர்
தருமமும் அறமும் விஞ்சும்
தாம்பத்ய வாழ்வில் கண்டார்
பெருகெழில் இராசம் மாவாள்
பேரெழில் நங்கை ஆனாள்!

இனியதாய் இருக்கும் காலை
இந்தநாட் சலையா வத்தைக்
கனகசபை செல்லம் மாவாம்
கன்னலாம் தம்ப திகாள்
மனையறம் கண்ட போது
மைந்தராய் நால்வர் பெற்றார்!
நனிமகவு நாக ராசா
தம்பிராசா ஆகப் பின்னர்!

சின்ன(த்)துரை பொன்னம் பலம்
சேரவே ஆன மைந்தர்
அன்னவர் நால்வர் ஆக
அழகராய் நிற்கும் காலை
மின்னலாம் இராசம் மாவை
மிகுமகன் தம்பி ராசா
கன்னலாய் வதுவை செய்யக்
கனிந்ததே இனிய வாழ்வு!

தம்பிராசா ஆசி ரியத்
தகைசான்ற செம்மல் பக்கம்
அம்பொழில் இராசம் மாவாள்
அருதிரு விவாகம் கண்டாள்!
உம்பரும் வியக்கும் வாழ்வில்
உவந்தைவர் பிள்ளை கண்டார்!
செம்பரும் பருவம் விஞ்சச்
சிறப்பெல்லாம் கண்டு வாழ்ந்தார்.

பூமகள் என்னும் பெண்ணாள்
பிறந்தனள் முதல்வள் ஆக
கோமகன் முருக தாசன்
மீக்குயர் கணேச தாசன்
நாமகன் யோக தாசன்
நால்வரோ டைந்தாம் பெண்ணாய்
சீர்மகள் சிறப்பு வாய்ந்த
சிவமலர் பிறந்தார் அம்மா!

பூமகள் சத்(தி)ய நாதன்
பெருந்தகை மணமும் கண்டாள்!
நாமகள் யாழ்ப்பா ணத்தில்
நற்பணி கண்டாள் இன்னும்
கோமள முருக தாசன்
கொழும்பிலே வணிகத் தோடு
பாமகள் பங்க ஜத்தை
பாகமாய்க் கொண்ட போது!

தர்சிகா நந்து ஜாவாம்
தங்கமாய் இருபெண் பிள்ளை
பர்வதம் போலே காணப்
பட்டது கண்ணே போலப்
சர்வதம் வணிக வள்ளல்
சார்ந்தவர் முருக தாசும்
நிர்மலன் தாளே காண
நீங்கினார் பூமி வாழ்வு!

தந்தையார் தம்பி ராசா,
தனையனாம் முருக தாசும்
விந்தையாய் அமர ராக
விரதமார் இராசம் மாவாள்
நொந்துதான் போனாள் ஆனால்
நோவினாள் எழுந்து பிள்ளைச்
சிந்தையாய் வாழ்தல் ஒன்றே
சிறப்பென்று வாழும் காலை!

கணேசதாஸ் சுபாசி னியாம்
        காதலாம் வாழ்வு தன்னில்
துணையென நால்வர் பிள்ளைத்
        தூரிகை பெற்று வாழக்
குணநல லாவண்யா சரண்யா
        கொண்டவ ரோடு மைந்தர்
மனையினில் எழிலன் மயூரன்
        இலங்கிடப் பேரர் கண்டார்!

யோகதாசன் மணிமே கலையாள்
        உலவிய இல்ல றத்தில்
யாகப்பயிர் போலே பிள்ளை
        ஞாலத்தே இருவர் காண
பாகரும் பைரவி இன்னும்
        வித்தகன் என்னும் மைந்தன்
தேகரும் பாகக் காண
        திளைத்தனள் இராசம் மாவாள்!

சிவமலர் என்னும் ஐந்தாம்
        செல்வச்சீர்ப் பெண்ணாள் மாறன்
நவரத்தின ராசா தன்னை
        நற்றிரு மணமு மாற்ற
அஜனன்உம் கார்த்தி கன்னாம்
        அன்புசால் பேரர் களைப்
புவியினில் கண்டார் தாயார்
        பெரும்மகிழ் வுற்றார் தாமே!

உணவுகள் கொடுத்துப் பார்த்தார்!
        உவந்துமே பேரப் பிள்ளை
இணையிலார் கல்வி மேவ
        இல்லத்தே இராசம் மாவார்
துணையெனச் சரஸ்வ தியாய்
        தூணாக நின்றார் கொண்ட
கணவரும் மூத்த மைந்தன்
        கருகவும் எழுந்து நின்றார்!

எல்லோர் வாழ்வும் நல்ல
        இல்லமும் சமைத்த மாது
நல்லறம் நல்லூர்க் கந்தன்
        நாளெலாம் துதித்த மாது
சில்லிடும் இலந்தை வனப்
        பிள்ளையார் துதித்த மாது
சொல்லரும் பாகச் சுற்றம்
        சேர்ந்தழப் பறந்தே சென்றாள்!

கார்குளிராம் கார்த்தி கையில்
        கனியபரச் சப்த மியில்
சீர்மகனார் முருக தாசன்
        சென்ற அதே திதிய தனில்
ஏர்ஆயிரத்துப் பதினொன்றில்
        இறைதேதி பதினே ழில்தான்
பேர்மகளாள் இராசம் மாவாள்
        பிரிந்திறையே ஆனாள் அம்மா!

(வாழ்க்கைச் சரிதம் முற்றும்)



# மீண்டும் வருவாயோ அம்மா!
## (மூத்தமகள் பூமகள் சத்தியநாதன்-யாழ்ப்பாணம்)

ஐயிரண்டு திங்கள் அகமகிழ்ந்து பெற்றெடுத்து
பாசச் சிறகுக்குள் பக்குவமாய்த் தான்வளர்த்து
மூத்தமகள் என் முதுசம் எனக்கூறி
முழுஅன்பைக் கொட்டி என்னை வளர்த்தாயே தாயே!

கற்று ஒரு நிலையதனைப் பெற்றிடவே
கல்வியுடன் உயர்வினையும் தெரிய வைத்தாய் தாயே!
உற்றாரும் மற்றோரும் உயர்த்திப் பேச
உயர்ந்த ஒரு நிலையதனை எமக்களித்தாய்!

வாழ்க்கைக் கூடின்று வலுவிழந்து போனதம்மா!
தாய்ப்பறவை இல்லாது தவியாய்த் தவிக்குதம்மா!
தாயுன்னைப் பிரிந்ததினால் தவிக்குதுஎன் நெஞ்சமம்மா!
தரணியில் நானிருந்து தவியாய்த் தவிக்கிறேனே!

மூத்தமகள் நானென்று ஊரோடு விட்டுவிட்டு
கடல்கடந்து சென்றாயே தாயே!
கண்காணாத் தேசத்தில் மூவைந்து வருடங்கள்
முழுதாய்க் கழிந்ததம்மா!

உடன்பிறந்த சகோதரர்கள் யாவருமே
உன்கடமை செய்ய, நான் மட்டும்
தனிமரமாய் நின்றின்று தவியாய்த் தவிக்கின்றேன்.
ஊனின்றி உறக்கமின்றி உருகுகிறேன் அம்மா!

குற்றமென்ன நான் செய்தேனின்று
வெற்றுடலாய் வாழுகிறேன் அம்மா!
என் நெஞ்சமதை வாடவைத்துக் காடு போனதேனம்மா!
என் வீடே காடாகி வேதனையில் வாடுதம்மா!

உனைப்பார்க்க வருமாறு பலநாட்கள்
பணித்திருந்தாய், நான் பாரா முகமானதனால்
என்னைப் பார்க்காமல் போனாயோ?
கொடுத்து வைக்காத பாவி நானம்மா!
தேடித் தவிக்கின்றேன்! நீபோன இடம் தானெங்கே?

மனமுருகி அழவைத்து எங்கு சென்றாய்!
என்தாயே மறந்தீரோ! மறைவுற்றீரோ!
அனலுருகி மெழுகாகி, உந்தன் அன்பை எண்ணி
அழுகின்றேன்! தவிக்கின்றேன்! துயர் துடைக்க
மீண்டும் வருவாயோ? உன்மடியில் நான் தவழ!

# மைந்தர் வருந்துதல்

தந்தைதாம் போகத் தாயெம்மைப் பார்த்தவரே
சிந்தையில் எம்மைச் சேவித்து வளர்த்தவரே
முந்தைப் பிறப்பின் மூண்டவழி தன்னாலே
இந்தப் பிறப்பில் எங்கள்குலம் கண்டவரே!

அண்ணன் விண்செல்ல அம்மாநீ கவலையுடன்
எண்ணி முதல்மகனை எண்ணி அழுதாலும்
திண்ணங் கொண்டெம்மை திருத்தி வளர்த்தாய்நீ
வண்ணங் கலையாமல் வாழ்விட்டுச் சென்றாய்நீ!

எங்குற்றீர் சொல்லுங்கள் இதயம் வெடிக்குதம்மா!
தங்கத் தேர்போலே தந்தமனை வாடுதம்மா!
பொங்கிவரும் மகிழ்வோடு பூரித்த எம்இல்லம்
உங்கள் நினைவாகி உள்ளம் இடியுதம்மா!

சேவித்து நின்றவளே சிந்தை அரவணைப்பில்
காவல்போல் நின்றவளேகாணாது ஏங்குகின்றோம்!
மேவிமனை வாழ்ந்த மேதினியை விட்டிறைவன்
கூவியழைத் தானோ குலவிருட்சம் வாடுதம்மா!

# சின்னமகள் சிவமலர் துயருறுதல்

அன்புச் சொல்லாலே அருகிருந்து வளர்த்தவரே
இன்பமாய் இருக்க எப்பொழுதும் உழைத்தவரே
நன்றாய் வாழவென நாளெல்லாம் பாடுபட்டீர்
எங்கள் அம்மாவே எங்குசென்றீர் வாடுகிறோம்.

மணமாற்றி யெங்கள் மகிழும் வாழ்வதனை
மனக்கண்ணில் கண்டு மகிழ்ந்தீர் அம்மாவே!
குணத்தில் சிறந்த குதித்தோடும் பேரர்களை
கணத்தில் மறந்தீர் காலமென்று உனைக்காண்போம்!

கல்வியொடு நல்லமனை காட்டும் திருவுருவம்
இல்லையென எண்ணி இப்பொழுது வாடுகிறோம்!
அண்ணனை நினைத்தோ அரும்தந்தை தான்நினைத்தோ
விண்ணைநீ சென்றனையோ வீழ்ந்தழுது புலம்புகின்றோம்!

# மருமக்கள் வருந்துதல்

மருகரென நீங்கள் மனதார நினைக்க வில்லை
மைந்தரென நினைத்தே மதித்து நடந்தீரே
உருகும் பாசத்தே உங்கள் பேரர்களை
மருவி அணைத்தீரே மகிழ்ந்து இருந்தீரே!

பெருகும் உள்ளத்தே பெருமன்னை போன்றவரே
பொருளும் நற்பண்பும் பெருமுழைப்பும் பெற்றுயர
அருகிருந்து பேரர்களை அணைத்து மகிழ்ந்தவரே
இறைவன் அழைத்திடவா ஏகினைநீ மாமியரே!

பற்றும் பாசமொடும் பண்பும் உவந்தெம்மை
நற்குடும்பக் கூட்டாக நயந்து சிறகிருத்தி
கற்கண்டுக் கனிமொழியில் கதைத்து மக்கள்போல்
சொற்கொண்டு அழைத்தவரே சிந்தித்து அழுகின்றோம்!

# பேரர் வருந்துதல்

பாட்டி எங்கள் பாட்டி
பாதை சொன்ன பாட்டி!
ஊட்டி எம்மை வளர்த்து
உலகம் சொன்ன பாட்டி!

தோளிற் சாய்ந்து துள்ள
சுற்றி ஓடிப் பிடிக்க
நாளும் கடவுள் எண்ணி
நயக்க வைத்த பாட்டி!

கல்வி தன்னைப் போற்றிக்
காலம் எல்லாம் ஊட்டி
சொல்லித் தந்த பாட்டி
சென்ற தெங்கோ பாட்டி!

நினைத்து நினைத்து அழுகின்றோம்
நெஞ்சில் இருத்தித் தொழுகின்றோம்!
அனைத்துப் பொழுதும் பாட்டியுந்தன்
அன்புக் காக அழுகின்றோம்!

# ஊரார் வருந்துதல்!
## (எழுசீர் விருத்தம்)

ஊற்றாகி நின்று உயிராகி நின்று
ஊராராய் நின்றனை அம்மா!
வேற்றாகி நிற்க விளையாத பண்பு
வித்தாகக் கொண்டதும் கண்டோம்!
காற்றாகும் வாழ்வு கவர்ந்தாட நீங்கள்
கைலைக்குச் சென்றனை கண்டோம்!
சேற்றாடும் வயலூர் சிறப்பான இலந்தைச்
சிவன்பிள்ளை யோடுநீ வாழ்க!

# என்றும் அன்பான குஞ்சியம்மா!

அன்புக்கும் பண்புக்கும் மதிப்புக்கும் உரிய திருமதி தம்பிராசா இராசம்மா எனது சிறிய தாயார் ஆவார். இறைநம்பிக்கையும் எல்லோருடன் பழகும் தன்மையும் கொண்டவர். கனிவுடன் கூடிய கண்டிப்பான ஆளுமை நான் இவரிடம் கண்ட ஓர் சிறப்பம்சம்.

இவரது கணவர் மதிப்புக்குரிய ஆசிரியர் கனகசபை தம்பிராசா அவர்கள் மறைந்த போது அத்துயரில் இருந்து மீட்சி பெற்று, அவரது கனவை நனவாக்கும் வகையில் குடும்பப் பொறுப்பை ஏற்று பிள்ளைகளை அன்புடனும், பண்புடனும், அறிவுடமையுடனும் வளர்த்து அனைவரையும் சான்றோர் ஆக்கி சீரும் சிறப்புமாக வாழ்ந்த பெருமைக்குரியவர்.

இலங்கையில் வாழ்ந்தபோது, போராட்ட சூழலில் தாங்க முடியாத இருபெரும் இழப்புகளை நேரடியாகக் கண்டவர். அவர் கொண்ட இறைபக்தியும், ஆன்ம பலமும், மனத்துணிவும் அவரை மீண்டும் முன்னேற்றப்படி நோக்கி வழிநடத்திச் சென்றன. குஞ்சியம்மா தனது பிள்ளைகள் மீது மட்டுமன்றி உற்றார், உறவினர், சுற்றத்தார் மீதும் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவர் என்பதனை நான் நேரடியாகவே அறிவேன். என்னையும் அவர் தன்பிள்ளை போலவே நினைத்து வந்தார்.

நான் சிறுவனாக இருக்கும் போது அடிக்கடி காய்ச்சல் வரும். அதனால் எனக்கு எனது தாயார் வாழைப்பழம் கூடாது என தரமறுப்பார். ஆனால் எனது குஞ்சியம்மா இரகசியமாக அழைத்து பாதி வாழைப்பழமாவது தந்து என்னை மகிழ்விப்பார்.

அவர் என்னைத் தம்பி என அழைக்கும் ஒவ்வொரு போதும் நானும் எனது சகோதரிகளும் குஞ்சியம்மா என அழைக்கும் போதும் மனதினில் ஒரு நிறைவினைக் கண்டோம். எனது தாயாரது இழப்பின் பின்னர் இவரைக் காணும் போது தாயாகவே நினைத்து வாழ்ந்தேன்.

மரணத்திற்கு ஒரு சில மணி நேரங்களுக்கு முன்னர், நான் அவரை வைத்தியசாலையில் பார்க்கச் சென்றபோது கூட, என்னைக் கண்டவுடன் ஆரத்தழுவி முத்தமிட்டதை என்னால் என்றும் மறக்க முடியாது.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும் “ என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த எனது குஞ்சியம்மா நிச்சயம் இறைவன் சந்நிதானத்தில் அவருக்கு ஓர் இடமுண்டு.

அவரது ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**க.பரமகுருநாதன்-பெறாமகன்.**

# Our Sinna Maami

Maami, A great aunt to love and cherish
Loving, Caring, Kindness is what defines her.
Her beauty her radiance and truth foretell
Her kind and lovable manner affable to one and all
Made us happy stable united and glad.
We loved her and held her in esteem with the hope of having her to ourselves
And then a brief illness departed her.
Maami lived a good life and departed this world with fame and honor.
We will forever be thankful and our love for her only grows more with each day that passes.
Sinna maami is in our minds forever apart of us even though we are apart,
She will forever remain in our heart.
God has her in his keeping. We have her in our heart.
May her soul Rest In Peace.

**Late brother Subramaniam's family**

# "KOVIL PAATTY"

First, we would like to thank you for giving us this opportunity to write about this wonderful lady "Kovil Paatty"

She is our grandfather's sister and our amma and mama are very fond of her. Although we had not had the chance meet our grand father, we saw him in "Kovil Paatty".

We called her Kovil Paatty because she was a frequent visitor of "Ilanthai Vana Pillayar Kovil and when we were young children she used to give us prasatham and monetary gifts during the festive season.

Although she moved to Canada she still regularly contacted our family. Our amma and mama have a very special place for Kovil Paatty in their hearts.

When we went to Canada in August 2011, fortunately we had the opportunity to see her again and spend some time with her. During that time we were so impressed with the way she presented her self at the age of 90 and handled her last illness.

She was so kind, caring and showered us with love and compassion. When we left her house after that visit, all we could remember was her happy smiling face.

We pray the almighty God to give her family the courage and strength needed to cope with her loss.

"May her soul rest in Peace"

Om Shanthi Shanthi, Shanthi!

Sincerely,
Late Brother Arumugam's family

# இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பு

சங்கம் வளர்த்துத் தமிழ் வளர்த்த வண்டமிழர் பரம்பரையின் வந்துதித்த வேலணையூரின் ஐந்தாம் வட்டாரத்தில் சைவ வேளாண்குல மரபு வழித்தோன்றலாய் அவதரித்த புற்றிடங்கொண்டார் நாகம்மா என்பாரைத் திருமணம் செய்து, நடாத்திய இல்லறத்தின் பயனால் முருகேசு, ஆறுமுகம், சுப்பிமணியம் என மூன்று ஆண் மகவுகளும் தங்கம்மா, இராசம்மா என இருபெண் குழந்தைகளும் இவர்களின் குலம் தழைக்க குலக்கொழுந்துகளாக இப்புவியின் கண்ணே வந்துதித்தனர்.

இளமைப்பருவம் அடைந்த இராசம்மா, ஆசிரியர் தம்பிராசா அவர்களை மணங்கொண்டு வாழ்க்கையில் இறைவன் திருவருளால் பூமகள், முருகதாஸ், கணேசதாஸ், யோகதாசன், சிவமலர் என ஐவர் பிள்ளைகளாக வந்துதித்தனர்.

காலா காலமாக வேலணை மண்ணலேயே வாழ்ந்து வந்த அமரத்துவமாது இராசம்மா, தொண்ணூறுகளில் நாட்டில் தோன்றிய யுத்த சூழ்நிலை யால், வீடு தரைமட்டமாக்கப்படவே கொழும்பு சென்று தனது மூத்த மகன் முருகதாசுடன் வாழலாயினர். 1994ஆம் ஆண்டளவில் பிள்ளைகள் அனுசரணையில் கனடா ஏகி இறுதிவரை, கனடாவில் வாழும் தனது மூன்று பிள்ளைகளுடன் மாறி மாறி வாழ்ந்து வரலாயினர்.

வள்ளலாம் கூறியது போல, “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் நானும் வடினேன்” என்ற வாக்குக்கு அமைய வாழ்ந்து மறைந்தவரே, நான் அறிந்த இராசம்மா ஆவார். தன் துணைவரது கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும், பிள்ளைகளது கற்றல் நடவடிக்கைகளுக்கும் பின்னணியாய் நின்று அவர்களது வெற்றிக்கு துணை நின்றவர் இராசம்மா என்றால் அது மிகையாகாது.

இவர் நற்குணம், நல்லொழுக்கம், நற்சிந்தனை,

இறைவழிபாடு மிக்கவராக வாழ்ந்ததோடு எப்பொழுதும் உதவுங் கரங்களுடன் உலவி வந்தார் என்பது மனங் கொள்ளத்தக்கது. விருந்தோம்பல் பண்பு, சினம் அறியாச் சிரிப்பு, இன்னல் விளைவிக்காத மனப்பாங்கு இவை யாவுமே இராசம்மாவின் அணிகலன்களாக இறுதிவரை இருந்தன. இராசம்மாவின் இத்தகு உயர் பண்புகளே இவரது கணவரதும், பிள்ளைகளதும் உயர்ந்த விழுமியமிக்க வாழ்விற்கு வித்திட்டன எனத் தாராளமாகவே கூறலாம். உதாரணங் கூறுமளவிற்கு இராசம்மாவைப் போல் வாழ்ந்தவர்கள் ஒரு சிலரே என என்னால் உறுதியுடன் கூறமுடியும்.

மற்றவர்கள் பிழைகளை மறப்பது மட்டுமன்றி, பிறர் மனதையும் கனிய வைக்கும் விதத்தில் கண்ணியமாகப் பேசுவது, எடுத்த கருமத்தினை பொறுப்புணர்வுடன் பிறர் போற்றும் வண்ணம் செய்து முடிப்பது போன்ற பண்புகள் ஒருங்கிணையைப்பெற்ற இராசம்மாவின் இழப்பானது அன்னாரின் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, உற்றார், உறவினர்கள் மற்றும் ஊரவர்கட்கும் இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பு என்பது திண்ணம்.

அருமைக் கணவருடனும் மூன்று ஆண்பிள்ளைகளுடனும் இருபெண்பிள்ளைகளுடனும் சீரும் சிறப்புமாய் பெருவாழ்வு வாழ்ந்து மறைந்த அமரர் இராசம்மா தம்பிராசா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பெருங்குளத்து முத்துமாரியம்மனை மனதாரப் பிரார்த்திப்போமாக.

**எஸ்.பி.சாமி.**
நிறுவுனர், தினக்குரல்-கொழும்பு.

# அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு!

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு!

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கமைய வாழ்ந்த வேலணை வடக்கு, ஐந்தாம் வட்டாரத்தில் பெருங்குடியில் புகழோடு வாழ்ந்த புற்றிடங்கொண்டார் நாகம்மா தமப்திகளின் இளைய மகளாகப் பிறந்து பாசத்திற்கும் அன்பிற்கும் உரியவராக வளர்ந்து உரிய வயதெய்தியதும், அவ்வூரில் அதே நிலையில் உள்ள கனகசபை செல்லம்மா தம்பதிகளின் மகனான திரு.தம்பிராசா ஆசிரியப் பெருந்தகையைக் கணவராயடைந்த பெரும் பாக்கியவதி இராசம்மா ஆவார். பெயருக்கு ஏற்ப வாழ்ந்து மக்களாலும், பேரப்பிள்ளைகளாலும், மிகவும் நேசிக்கப்பட்டவர் அவர்.

மண்ணுலக வாழ்வை வெறுத்து விண்ணுலக வாழ்வை விரும்பித் தவமிருந்து இலந்தைவன விநாயகரைச் சிந்தையிலிருத்தி, நோன்பிருந்து சிவபதம் எய்திய பேரன்புக்கு உரிய எனது சிறிய மாமியாரை என்றும் என் சிந்தையில் ஏற்றுகிறேன்.

பாசக் கயிறிழுக்கப் பூசத் திருநாளில்
நேசமுடன் ஈசன் இருதாளைப் பற்றி
நாடி அபரபக்கச் சப்தமியில்
கூடிநின்ற மக்களழ ஏகினார் இராசம்மா.

என்றும் பிரார்த்தனையுடன்
**த.புண்ணியமூர்த்தி ஆசிரியர்**
**வேலணை-5**

# எம் நெஞ்சில் நிறைந்தவர்

"எப்பொழுதும் விநாயகனே என்பேன்!

எழுந்து மகிழ்ந்து தொழும் போதும்
விநாயகனே என்பேன்-தொழுதே
உருகி அழும்போதும் விநாயகனே என்பேன்!
அடியேன் சடலம் விழும்போதும் விநாயகனே என்பேன்!

வெற்றி விநாயகனே!"

என்ற உருக்கமான வரிகளின் ஞாபகத்துடன் நீங்கள் பிறந்த பயனைப் பூரணமாக அடைந்தபின் அமைதியாக இறைவன் காலடியில் இளைப்பாறிக் கொண்டு, உங்கள் குடும்பத்தினரையும் உறவி னரையும், அன்புடன் பழகியவர்களையும் ஆசீர்வசித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

நீங்கள் வாழ்ந்த காலத்தில் பண்பான இல்லத்தரசியாய், பாசமிகு அன்னையாய், இளைய செல்லச் சகோதரியாய், போற்றற்குரிய மாமியாய், கரிசனை மிக்க பேத்தியாய், அயலாரின் மதிப்புக்குரியவராய், சீரும் சிறப்புடன் இறுதிவரையும் வாழ்ந்த பெருமைக்கு உரியவராகத் திகழ்ந்தீர்கள்.

நீங்கள் எமக்கு உறவினராகவும், அயலாராகவும் விளங்கியமையால் உங்களின் பண்பான குணங்கள் எமக்கு நன்கு தெரியும், அவை எம்மைக் கவர்ந்தன என்று சொல்வதில் பெருமைப் படுகின்றோம். என் குடும்பத்தில் ஏற்படட் துயர நிகழ்வுகள் யாவற்றிலும் மிகக் கரிசனையுடனும், பாசத்துடனும் பங்குபற்றி, எங்களையும், சிறப்பாக என் அன்னையையும், ஆறுதல் கூறி அரவணைத்து நடந்த உங்கள் பண்பான குணங்கள் எங்கள் மனதில் என்றும் நிறைந் திருக்கின்றது.

உங்கள் பிள்ளைகளின் கல்வியில் மாத்திரமன்றி உறவினர்கள், அயலவரின் பிள்ளைகளின் கல்வியின் முன்னேற்றத்தில் கரிசனை கொண்டிருந்தீர்கள். நாங்களும் உங்கள் பிள்ளைகளும் நீண்டநேரம் உதைபந்தாட்டத்தில் நேரத்தைச் செலவழித்தால், மிகவும் அமைதியாக விளையாடும் இடத்திற்கு வந்து,

பின்னுக்குக் கைகளைக் கட்டிக்கொண்டு பார்வையினாலேயே எங்கள் விளையாட்டை நிறுத்துவதை நாங்கள் நினைக்கின்றோம். எங்கு எங்களைக் கண்டாலும் மிகவும் அன்போடும், அக்கறையுடனும் பழகுவதை எப்படிமறக்க முடியும்.

தவறாது ஆலயத்திற்குச் சென்று வந்த நீங்கள், மூத்தமகன் முருகதாசின் இழப்பின் பின் கோவில்களுக்கு கொண்டாட்டங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்டீர்கள்.

கொள்கைகளில் மிகவும் உறுதியானவராகக் காணப்பட்டீர்கள். புலம்பெயர்ந்து கனடா வந்தும், எங்கள் எல்லோரினதும் தொடர்பு இறுதிவரையும் மிகவும் நெருக்கமாக இருப்பது என்றும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

உங்கள் வாழ்நாளிலேயே உங்கள் பிள்ளைகள் யாவரும், சீரும் சிறப்புமாக வாழ்வதைக்கண்டு மிகவும் மகிழ்ச்சியடையும் பாக்கியம் பெற்றீர்கள்.

இறுதியாக உங்கள் ஆத்மா சாந்தியடைய உங்கள் குடும்பத்தினருடனும், உறவினர்களுடனும், ஊராருடன் சேர்ந்து நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பாலா. யோகநாதன் ஆசிரியர்
(உறவினர், அயலவர்)

# தெய்வத்தாய்

பிறந்தவர் யாவரும் இறப்பது நியதி என்ற தத்துவத்தின் உண்மையை உள்வாங்குவதற்கு உரிய அறிவு எனக்கு இருந்தபோதும் எனது ஆரம்ப பாடசாலை ஆசிரியரான அமரர் திரு. தம்பிராசா அவர்களது நல்வாழ்க்கைத் துணைவியும், எனது ஆரம்பகால கல்விக் காலத்தின் வகுப்பறை நண்பரான அமரர் முருகதாஸின் தாயாருமான இராசம்மா அவர்கள் இறந்த செய்தி எனது இதயத்திலே ஒருகணம் உறுத்தியது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"!

என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய புகழொடு தோன்றிப் புகழொடு வாழ்ந்து, புகழோடு மறைந்த பெருந்தகையே எமது அன்னை.

அன்னை இராசம்மா கடைசிப்பிள்ளை என்பதற்கும் அப்பாற் பட்ட வகையில் தனது தாய், தந்தையின் அருமைக்கும், அன்புக்கும் பாத்திரமாய் இருந்ததோடு தமது இல்லற வாழ்விலும் ஒளிவீசும் நட்சத்திரமாக உற்றார், உறவினர்களது அன்புக்கும் பாசத்திற்கும் உரிய வராக திகழ்ந்தார். எமது வேலணைக் கிராமத்தில் எப்பொழுதும் ஆசிரியர்களுக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் அன்பும், உயர் மதிப்பும், மரியாதையும் வழங்கும் பண்பு எம்மக்களிடையே தொடர்ந்து காணப்பட்டு வந்தது. அந்த வகையில் அமரர் தம்பிராசா ஆசிரியருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நாம் எல்லோரும் உயரிய மதிப்புக் கொடுத்து வந்தோம். எனது சகோதரர்களில் நால்வர் ஆசிரியர் தம்பிராசா அவர்களது மாணவர்களாக இருந்தோம் என்பதனை நினைவு கூர விரும்புகின்றேன். 1987ஆம் ஆண்டு தம்பிராசா ஆசிரியர் அவர்களது மரணத்தின் பின்னர் தமது குழந்தைகளை, பேரப்பிள்ளைகளை பாசத்துடனும் பரிவோடும் அன்புடன் பார்த்து எடுத்தவர். அவர்கள் அனைவரையும் இணைக்கும் நல்ல ஒரு பாலமாகச் செயற்பட்டவர்.

எமது வேலணைக் கிராமத் தாய்மார்கள் அதிகளவு தெய்வ நம்பிக்கை உடையவர்களாகவும், தன்னடக்கத்துடன் மற்றவர்களுடன் பழகு பவர்களாகவும், வரவுக்கு ஏற்ப செலவு செய்யும் குடும்ப நிர்வாகிகளாகவும், கணவர்மார்களுக்கு உற்ற துணையாக வாழ்பவர்களாகவும், விரும்பியவாறு விருந்தோம்பல் செய்பவர்களாகவும் வாழ்பவர்கள் ஆவர். அந்த வரையறைக்குள் இராசம்மா அம்மையாரும் உள்ளடங் கப்பட்டிருந்தார். இவர் இலந்தைவனம் பிள்ளையார் மீது அதீத பற்றுக் கொண்டவர். வருடாவருடம் இடம்பெறும் சகல விரதங்களையும் தவறாது அனுஷ்டித்து இறை பக்தியுடன் வாழ்ந்து வந்தவர்.

ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்த அன்னையின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றேன்.

A.SENTHILVADIVEL
Manager,
Canada Revenue Agency ,Toronto.

# அப்பம்மாவைத் தேடுகிறோம்!

## தர்சிகா முருகதாஸ் (B.Com(Hons)-U.K
## நந்துஜா முருகதாஸ் (CMA-Australia)

மனிதப்பிறவியின் மாண்பை உங்கள் வாழ்நாளில் ஏற்படுத்திக் கொண்ட அப்பம்மாவே!,

தூரத்தே இடி விழுந்ததுபோல் உங்கள் பிரிவுச் செய்தி கேட்டு உறைந்து விட்டோம். பரந்த நெற்றியில் விபூதிப்பூச்சு, மலர்ந்த முகம், இரக்க மனப்பான்மை, எளிமையான கோலம், அன்புக்கு அணிகலன், சுறுசுறுப்பான நடை, வந்தோரை வாவென்று அழைக்கும் புன்னகை, இவற்றை அணிகலன்களாகக் கொண்ட உங்கள் உருவத்தை நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

எங்களுடைய அப்பா பிரிந்த பின்பும் நீங்கள் எங்களுடன் தொலைபேசியில் கதைக்கும் போது, நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள் என்றுதான் முதலில் கேட்பீர்கள். அதை நினைக்கும் போது எங்கள் நெஞ்சம் இப்போதும், வேலணை உங்கள் இல்லம் "ராஜபதி"யை நினைவுகூரும். அந்த நினைவலைகள் எங்கள் கண்முன் நிழலாடுகின்றது.

அப்பாவின் மரணச் செய்தி உங்கள் வாழ்க்கையில் ஒரு பேரிடி, உடன் கொழும்புக்கு எங்கள் இல்லம் வந்து எங்களை ஆர அரவணைத்து அழுத காட்சியை மறக்க முடியுமா?

இத்தனை பண்புகளை தன்னகத்தே கொண்டு சிறந்த வாழ்க்கை வாழ்ந்து அமரர் ஆகிவிட்ட ஒரு தெய்வம். உங்களுக்கு வழிகாட்டிய நல்லூர்க்கந்தன் எங்களுக்கும் துணைபுரிவார் என்று நம்புகிறோம். நீங்கள் காட்டிய வழியில் நாங்கள் நடந்து செல்வோம்.

"Appammah will be in our memories FOREVER"

-அப்பம்மாவின் நினைவலைகளைச் சுமந்து நிற்கும்

**மூத்த பேரப்பிள்ளைகள்**

**தர்சிகா முருகதாஸ், நந்துஜா முருகதாஸ்**

# Our Sweet Apamma

Appama you have raised us so well, where have you gone? We have been drenched in tears after hearing about your death. You frequently praise us as your oldest, loving granddaughters. We still remember when you gave us milk every morning and sang lullabies every night as growing youngsters. After our father's death, we were in despair because we didn't see you after the tragedy and we remember how deeply saddened you were by it. However, our hearts are with you at all times. We would always come to you in the middle of the night when we were unable to fall asleep and your soothing affection and lullabies would constantly help us. Your passing has been a great impact on us emotionally as you have been a great person to every single family member. We hope that you rest in peace, grateful for what you have experienced and proud of what you have brought into this world.

Love,
Tharshika Murugathas (UK)
Nanthuja Murugathas (Aus)

# APAMMA IS ALWAYS WITH US.

On November 17th, 2011, just three months shy of her 91st birthday, our Apamma passed away. Grandmothers are considered to be your second mother. Fortunately for us, as her grandchildren, that position did not require her to be a disciplinarian. Perhaps, this is the reason why grandparents are so loved. Grandchildren get all of the love and support without any of the worry that they might get chili rubbed in their eyes like she threatened to do to their parents.

As the eldest set of her grandchildren, we have been fortunate to have gotten to spend the most amount of time with Apamma. She was smart, brave, inspiring, and witty and had no problems saying what was on her mind. As a kids Apamma had a way of making us feel loved and always seemed to have a kind word of encouragement when we needed it most. She encouraged us to succeed in life, whatever path we chose and spoiled us rotten.

Apamma was a woman with courage and it was not until we got older and had experienced a bit of life's little dramas that we began to realize this. Over 16 years ago, Apamma sacrificed everything she had ever known to move to a place she knew only from stories, to start a new life. She made this move to be closer to the family she loved so dearly. She moved across the world to a country and culture that was completely foreign. Never mind the snow which was always a heated topic for her.

She was obviously very passionate about her family. She had five children and ten grandchildren. She loved seeing everyone together and enjoyed quality time with each of her grandkids. Our fondest memories of her are the countless tales she told of her past. The funniest ones had always been of our parents, aunts and uncles. She would take such pleasure in recalling their childhood.

Her life experiences truly made her a pillar of strength, even at her age. Words seem to be an inadequate way to explain how much we will miss our grandmother. The only words we can find that accurately express how we all feel are; Apamma we will always love you.

Dr. Lavanya. B

# OUR APAMMA

In 1994 Apamma came to Canada, leaving behind her daughter, two grandchildren and life in Srilanka. As children we were just excited to have a grandmother in Canada to share our life with, however as we got older we realized her courage. She was brave to move across the world to a country and culture that was completely foreign. We doubt she could have predicted that she would have seen snow in her lifetime. We looked forward to road trips to Ottawa to visit her and our Aunt in the summer. She made the most delicious rice and fish curry that would make our mouths water in anticipation. Apamma had the ability to make plain rice taste wonderful.

Family was her passion and raison d'être. She had five children and ten grandchildren. She loved each person of the family wholly and unconditionally. Although there were minor agreements and disagreements throughout the years, we move on. Our mother told us stories of how Apamma would prepare meals for our parents when they returned from school and make sure they ate first before eating her meal. This is one example of her overall kindness and willingness to put her family first and foremost. We will never forget the memories she shared with us or how she made us laugh when she told stories about our parents when they were young.

Lavanya, Saranya, Elilan, Mayuran

# OUR AMMAMA

After spending most of my life living with ammama for twelve years, we have gained a lot of experience from her. It all started when I was about four years old. My parents had gone out to go visit another relative's house, which left me and Ammama alone. I remember that she was cooking in the kitchen and I was in the family room watching TV. There was a movie that I wanted to watch but the video cassette was on a shelf above the TV, too high from reach. So I climbed on top of the television but it had, unfortunately, fallen on me. Ammama came running into the family room as soon as she heard the suspicious crash. Usually, a frail, old woman like Ammama would tend to call someone else for help to be in assistance for a situation like this. But she proved me wrong. Ammama helped me push off the TV and together we did manage to raise the TV to allow me to squirm off. Ammama clearly showed how much she cares for her grandsons by risking her own safety for me at the moment.

This was only the beginning of our bond. Ammama was like one of my close friends. She would always have my back in anything. I remember coming home with a lower than usual mark one day and I was worried because of what my parents would do. I had to get a signature and who else would I go to of assistance than my very own Ammama. So she signed the test for me and clueless Ammama asked what does number two mean. I told her that meant I was second in the class, so she told me to bring back a one next time.

Ammama was also renowned as the 'sugar momma'. Whenever my cousins would visit Ammama, she'd always have sweets ready. Along with my little brother who always use to nag her about treats. These ranged from starbursts to cookies. Ammama would always put a smile on someone's face. She saved candy as if it were gold. She kept them in her

little, empty Nestamol can banks. My brother always use to search her whole room when she wasn't there, looking for these Nestamol cans.

Experiencing so many ups and downs in life, Ammama was always there to help me and my brother out. From the TV incident as a kid to the amount of candies received, we have become very fond of her. Like the tangles in a rope that symbolize the memories we have had with ammama, it'll be hard to knot them out and acknowledge that the other piece of rope is gone- my ammama.

The day before she passed away, I was on the phone with her. She asked me what I was doing and I replied saying I was watching TV. There was a pause of silence and I knew that my grandma was looking for something else. So I added how I just finished studying and I was watching TV for a break. She told me not to watch TV and study hard. As the strength of her voice started to deteriorate, she finally emphasized one sentence at last. She told me to become successful in life. As a loving, respectful grandson, I promised to achieve that goal for the sake of my grandmother and for the grateful life I will have, which will surely satisfy my ammama.

## Your loving grandsons, Ajanan and Gartikan

# BELOVED APPAMA

It's said that "When someone you love becomes a memory, the memorybecomes a treasure." Our appama is and always will be our treasure.She was kind and considerate and patient, embodying all the qualities every grandchild would love to have in a grandmother. She lived an amazing life and throughout, she never regretted a single day of it. Through the years we had spent with our appama we had some of the best experiences of our lives.

Born in 1921, she was one of the healthiest people we knew. She lived with us for almost 4 years, and to many it wouldn't seem like a lot. But in those four years she taught us so much, things we would continue to live by for the rest of our lives. From learning how to write Tamil to making curry for the family, she merely made our lives a lot simpler than it had been before. For these reasons, we could never forget the memories we had with her. Seeing her watch Kalyani on TV, reading the newspaper every morning are just a few of what we will be missing, including the times she cared for us when we feared that others might not, the times she gave us treats when we felt we hadn't deserved them and more importantly, the times she gave us money for spending when our birthdays came. Appama was also a very unpredictable cook and she always gave our mom a little constructive criticism when it came to her cooking as well. Little by little, she performed the tasks that looked to be the task of someone a lot younger. However, she never complained and she most definitely never gave her children a hard time.

We've heard that "You never appreciate something till it's gone." This quote illustrates how human nature takes things for granted and in some ways, it illustrates us in the

same way. Appama was here for us when no one else was and now we cannot say we have that anymore. A few days before her passing, we had gone to the hospital to see her. We had known that her death was fast approaching, but we hadn't realized how much pain it would cause us to lose someone as gratifying as her. For this, she will truly be missed and the goals we set for our futures will be accomplished for the satisfaction of our appama.

Your beloved grandchildren,
Biravee and Viththeagan



# கண்ணீர் அஞ்சலி!

## வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா

அமரத்துவமாது இராசம்மா தம்பிராசா அவர்களது மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் அளவில்லாக் கவலையும் அடைந்தோம்.

பிறப்பவர் ஒருநாள் இறப்பது நியதி என்ற உண்மையை உணர்ந்து நமக்கு நாமே ஆறுதல் கூறியபோதும், இத்துன்பத்தை எம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடாவின் சார்பில் அன்னாருக்கு எமது இறுதி வணக்கத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் செலுத்திக் கொள்கின்றோம். மேலும் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரதும் துக்கத்தில் நாமும் பங்கு கொள்வதோடு அவர்களுக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,
நிர்வாக சபை வேலணை மத்திய கல்லூரி
பழையமாணவர் சங்கம்-கனடா

# கண்ணதாசனின் அனுபவ மொழிகள்

அமரத்துவ மாது இராசம்மா தான் படிக்கும் புத்தகம் ஒன்றினுள் கத்தரித்து வைத்திருந்த பத்திரிகைத் துண்டு இதுவாகும்.

**தேவைக்கு மேலே பொருளும்,**
**திறமைக்கு மேலே புகழும்**
**கிடைத்துவிட்டால்,**
**பார்வையில் படுவதெல்லாம்**
**சாதாரணமாகத்தான் தோன்றும்!**

அன்னையாரின் பிரிவின் துயரத்தில்,
**சிவா றேடர்ஸ் அஞ்சலி**

**No 92, 4th Cross Street, Colombo -11**
திருமதி. இராசம்மா தம்பிராசா அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

நிர்வாகத்தினர், ஊழியர்கள்
T.P 422041

# தேற்றம்

மானிடராய்ப் பிறந்துவந்து மகிழ்ந் திருப்போம்
மக்களோடு மனையாளும் மகிழ நிற்போம்
தேனதுவாய் வாழ்க்கையென்று திளைத்தே நிற்கத்
தேடலுடன் பொருள்தேடித் தேசம் செல்வோம்
போனதுவாய் ஏதுமில்லை இன்பம் என்றும்
பூவுலகில் எனக்கென்ன போதும் செல்வம்
ஆனதுவாய் என்றேநீ எண்ணுங் காலை
ஆண்டவனின் அழைப்புவந்து எம்மைத் தட்டி
வானதுவில் நீயின்றே வருக என்றே
வருமழைப்பு தன்னைநாம் மறுக்க லாமோ?
கானமுதக் கடவுளின்பால் கக்கம் நின்றே
கனிவதுமே வழியொன்றே காண்பீர் அந்தப்
பானமுதப் பாதைவழி பண்பாம் இறையை
பாசத்தாய் சென்றடைந்த பாகு காண்போம்!

(தாயாரின் பெருமை கூறும் இந்த அவரது வரலாற்றுப்
பாவரிகளை யாரும் சிதைக்கவோ கையாளவோ
வேண்டாம் எனக்
கனிவோடு கேட்டுக்கொள்கின்றோம்)

உ
சிவமயம்

# நன்றி நவில்கின்றோம்

அமர ஜோதியாய், அருட்பெரும் சோதியில் சங்கமமாகிவிட்ட எங்கள் குடும்பத் தலைவி அமரத்துவமாது அம்மா இராசம்மா தம்பிராசா அவர்களுக்கு அவர்களது பிரிவில், எங்கள் இல்லத்திற்கு வந்து ஆறுதல், அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்குகொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும், பார்வையாளர் மண்டபத்திலே வருகை தந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகள், அந்தியேட்டிக் முதலியவற்றில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தேவார தோத்திரங்களைப் பாடியும் மற்றும் கிரியைகளை நடாத்திய அந்தணப் பெருமக்களுக்கும், இந்த நினைவு மலரை அழகுற அச்சமைத்த ஜே ஜே அச்சகத்தினருக்கும், தட்டச்சில் எழுதி வடிவமைத்த பாரதி பதிப்பகத்தாருக்கும், நினைவு மலருக்கு தங்கள் உள்ளக் குமுறல்களை எழுதித்தந்த அனைவருக்கும், தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் மற்றும் அம்மாவின் குடும்ப வைத்தியர் Dr.C.S.மகேந்திரா அவர்களோடு, உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்,**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,பேரப்பிள்ளைகள்**
17-12-2011

# குடும்ப விருட்சம்

நெடுந்தீவு தனிநாயக முதலி வம்சம்
புற்றிடங்கொண்டார்
+
வேலணை தர்வாடி இல்லம்
நாகம்மா
↓
முருகேசு, தங்கம்மா, ஆறுமுகம், சுப்பிரமணியம், இராசம்மா

வேலணை சலையாவத்தை
கனகசபை
+
செல்லம்மா
↓
நாகராசா, தம்பிராசா, சின்னத்துரை, பொன்னம்பலம்

இராசம்மா + தம்பிராசா
↓

- பூமகள் + சத்தியநாதன்
- முருகதாஸ் + பங்கஜம் → தர்சிகா, நந்துஜா
- கணேசதாஸ் + சுபாசினி → லாவண்யா, சரண்யா, எழிலன், மயூரன்
- யோகதாசன் + மணிமேகலா → பைரவி, வித்திகன்
- சிவமலர் + நவரத்தினராசா → அஜனன், கார்த்திகன்

(அமரத்துவ மாது இராசம்மா அவர்களின் குடும்பத்தில் கணவர் தம்பிராசா, மூத்த மைந்தன் முருகதாஸ் ஆகிய இருவரும் அமரர்கள் ஆவார்)

# கீதாசாரம்!

எது நடந்ததோ அது நன்றாகவே
நடந்தது!
எது நடக்கின்றதோ அது
நன்றாகவே நடக்கின்றது!
எது நடக்க இருக்கின்றதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்!
உன்னுடையதை எதை
இழந்தாய்?
எதற்காக நீ அழுகின்றாய்?
எதைக் கொண்டுவந்தாய் அதை
இழப்பதற்கு?
எதைநீ படைத்திருந்தாய் அது
வீணாக்குவதற்கு?
எதைநீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ அது
இங்கேயே கொடுக்கப்பட்டது!
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது!
மற்றொரு நாள் அதுவே
வேறொருவருடையதாகும்!
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாரம்சமும் ஆகும்!

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணா



Type and Design: Bharathy

JJ PRINT 416.298.9322